Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 22/2026**

வழக்கு சாட்சி எண். PW3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வி | கிராமம் | : | மொரப்பூர் |
| கணவர் பெயர் | : | பத்மநாதன் | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 52 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரி ஆஜர்)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **02nd Day of June 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது மொரப்பூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 07.02.2026ம் தேதி காலை 02.30 மணிளவில் நான் எனது தலைமையில் என்னுடன் அசா 1 மற்றும் 2 ஆகியோருடன் மது விலக்கு குற்ற தடுப்பு சம்பந்தமாக மொரப்பூர் காவல் நிலைய எல்லைக்குட்ப்பட்ட கல்லாவி பிரிவு ரோட்டில் கண்காணித்து கொண்டு இருந்த போது ஆஜர் எதிரி காளிமுத்து மொரப்பூர் பக்கம் இருந்து TN 30 T 9469, CT 100 இருசக்கர வாகனத்தில் ஒரு பச்சையை வைத்து கொண்டு சந்தேகப்படும்படி வந்தார் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டவுடன் தப்பி ஓடி முற்பட்டார். அவரைப் பிடித்து சோதனை செய்த போது அவர் வைத்து இருந்த

பையில் 26 Express பிராண்டி பாட்டில்கள் 180ml அளவு வைத்திருந்தார். எதிரியிடம் அதைப்பற்றி கேட்ட போது எதிரி அருகில் உள்ள அரசு மதுபானக்கடையில் மொத்தமாக வாங்கி அதிக விலைக்கு விற்பதற்காக வைத்திருப்பதாக கூறினார். உடனே எதிரியை நான் அந்த இடத்திலேயே கைது செய்தேன். தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் என்னுடன் வந்த காவலர்கள் முன்னிலையில் எதிரியிடம் இருந்து 180ml அளவு கொண்ட 26 மதுப்பாட்டில்களை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசரில் என்னுடன் வந்த காவலர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன்.

இன்று என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசர் நான் தயார் செய்தது தான். **கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுள்ளது.**

கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை உயர் அதிகாரியின் உத்தரவு பெற்று அந்த இடத்திலேயே காவலர்கள் முன்னிலையில் கொட்டி அழித்தேன். மேலும் அழித்தர்கான ஆவணத்தையும் கைப்பற்றுதல் மகசரிலேயே வைத்து பதிவு செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன்.

பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து எதிரி மீது மொரப்பூர் காவல் நிலைய குற்ற எண் 29/2026 சட்ட பிரிவுகள் 4(1) (C) TNP Act படி முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசா ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினமே எதிரியை நிலைய பிணையில் விடுவித்தேன்.

சாட்சிகள் 1,2 தனிதனியாக விசாரணை செய்து வாக்கு மூலம் பதிவு செய்தேன்.

அத்துடன் எனது புலன் விசாரணை முடித்து 08.02.2026ம் தேதி எதிரி காளிமுத்து என்பவருக்கு எதிராக சட்ட பிரிவுகள் 4(1) (C) TNP Act படி இறுதி

அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரியும் புகார்தாரரும் நான் தான் என்றால் சரிதான். சம்பவம் ஆனது 07.02.2026ம் தேதியன்று நடந்தாக சொல்லபட்டுள்ளது என்றும் ஆனால் முதல் தகவல் அறிக்கை 08.02.2026ம் தேதியன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு விசாரணை 07.02.2026 தேதியன்றே முடிந்தது என்றால் சரிதான். அசாஆ-1 ஆன கைப்பற்றுதல் மகசரில் Mensclub (Deluxe Brandy) 5 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அழித்தல் மகசரில் Express பிராண்டி 26 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி வைத்திருந்தாக சொல்லப்படும் பை எந்த வகையானது என்றால் சோல்டர் பை. அதையும் கைப்பற்றினோமா என்றால் இல்லை. அழித்தல் மகசரில் சாட்சி கையொப்பம் ஏதும் இல்லை என்றால் சரிதான். நான் நான் சொல்வது போல் ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றும், அவ்வாறு நடந்து இருந்தால் பொது மக்களையும் சாட்சிளாக சேர்த்திருப்போம் என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக சரிவர புலன் விசாரணை செய்யாமல் இந்த வழக்கை எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 22/2026**

வழக்கு சாட்சி எண். PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கார்த்திகேயன் | கிராமம் | : | மொரப்பூர் |
| தந்தை பெயர் | : | அண்ணாமலை | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 35 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரி ஆஜர்)
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd **Day of June 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது மொரப்பூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும்.

கடந்த 07.02.2026ம் தேதி நான் பணியில் இருந்த போது மதியம் 02.30 மணிஅளவில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் செல்வி அவரது தலைமையில் நானும் என்னுடன் அசா-1 ஆகியோர் உடன் மது விலக்கு குற்ற தடுப்பு சம்பந்தமாக மொரப்பூர் காவல் நிலைய எல்லைக்குட்ப்பட்ட கல்லாவி பிரிவு ரோடு அருகில் வாகன தணிக்கை செய்து கொண்டு இருந்தபோது ஆஜர் எதிரி TN 30 T 9469, CT 100 இருசக்கர வாகனத்தில் சந்தேகப்படும்படி பச்சை நிற பையை வைத்துக்கொண்டு வந்தார் எங்களை பார்த்தவுடன் எதிரி தப்பியோட முற்பட்டார் அவரை நிறுத்தி விசாரித்த போது முன்னுக்கு பின்னாக பதிஅளித்தார். அவரை சோதனை செய்த போது அவர்

வைத்து இருந்த பையில் Express பிராண்டி 180ml அளவு கொண்ட 26 பாட்டில்கள் இருந்தது. எதிரியிடம் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் விசாரித்த போது அரசு மதுபானக் கடையில் இருந்து மொத்தமாக வாங்கி அதிக லாபத்திற்கு விற்ப்பதற்காக கொண்டுவந்ததாக குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் எதிரியை அந்த இடத்திலேயே கைது செய்து தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில் எதிரியிடம் இருந்து கைப்பபற்றபட்ட 26 பாட்டில்களை எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும் என்னுடன் வந்த அசா1ம் ஆகியோர் சாட்சி கையொப்பம் இட்டோம்.

இன்று என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2து கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுள்ளது.**

கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் உயர் அதிகாரியின் உத்தரவு பெற்று எங்கள் முன்னிலையிலேயே அழித்தார்.

பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து எதிரி மீது வழக்கு பதிவு செய்தார்.

வழக்கு தொடர்பாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்தாக சொல்லப்படும் இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் 100மீ இருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடம் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். அசாஆ-1 ஆன கைப்பற்றுதல் மகசரில் Mensclub (Deluxe Brandy)

5 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி வைத்திருந்தாக சொல்லப்படும் பை எந்த வகையானது என்றால் சோல்டர் பை. அதையும் கைப்பற்றினோமா என்றால் சரிதான். எதிரி எங்களை பார்த்ததும் என்ன செய்தார் என்றால் ஒடுவதற்கு முயற்சி செய்தார். எவ்வளவு தூரம் ஓடினார் என்றால் 20மீ இருக்கும். முதலில் நான் தான் ஒடி சென்று பிடித்தேன். இதனை பொது மக்கள் பார்த்தார்கள் என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட மது பானங்களும் மதுபான பாட்டில்களையும் அழிப்பதை பொது மக்கள் பார்த்தார்களா என்றால் சரிதான். அதனை புகைப்படம் ஏதும் எடுக்கவில்லை. வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தான் தயார் செய்தோம். எதிரி மதுபான பாட்டில்களை யாருக்காவது விற்பனை செய்தாரா என்றால் இல்லை. எதிரியிடம் ஒப்புதல் வாக்குதுலம் பெறப்பட்டது. நான் நான் சொல்வது போல் ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றும், அவ்வாறு நடந்து இருந்தால் பொது மக்களையும் சாட்சிளாக சேர்த்திருப்போம் என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக இந்த வழக்கை எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 22/2026**

வழக்கு சாட்சி எண். **PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சக்திவேல் | கிராமம் | : | தாளநத்தம் |
| தந்தை பெயர் | : | வேலுசாமி | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 40 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரி ஆஜர்)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd **Day of June 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது மொரப்பூர் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும்.

கடந்த 07.02.2026ம் தேதி நான் பணியில் இருந்த போது மதியம் 02.30 மணிஅளவில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் செல்வி அவரது தலைமையில் நானும் என்னுடன் தலைமை காவலர் 1207 கார்த்திகேயன் ஆகியோர் உடன் மது விலக்கு குற்ற தடுப்பு சம்பந்தமாக மொரப்பூர் காவல் நிலைய எல்லைக்குட்ப்பட்ட கல்லாவி பிரிவு ரோடு அருகில் வாகன தணிக்கை செய்து கொண்டு இருந்தபோது ஆஜர் எதிரி TN 30 T 9469 CT 100 இருசக்கர வாகனத்தில் சந்தேகப்படும்படி பச்சை நிற பையை வைத்துக்கொண்டு வந்தார் எங்களை பார்த்தவுடன் எதிரி தப்பியோட முற்பட்டார்

அவரை நிறுத்தி விசாரித்த போது முன்னுக்கு பின்னாக பதிளலித்தார். அவரை சோதனை செய்த போது அவர் வைத்து இருந்த பையில் Express பிராண்டி 180ml அளவு கொண்ட 26 பாட்டில்கள் இருந்தது. எதிரியிடம் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் விசாரித்த போது அரசு மதுபானக் கடையில் இருந்து மொத்தமாக வாங்கி அதிக லாபத்திற்கு விற்ப்பதற்காக கொண்டுவந்ததாக குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் எதிரியை அந்த இடத்திலேயே கைது செய்து தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில் எதிரியிடம் இருந்து கைப்பபற்றபட்ட 26 பாட்டில்களை எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும் என்னுடன் வந்த முதல் நிலை காவலர் 1207 கார்த்திகேயன் ஆகியோர் சாட்சி கையொப்பம் இட்டோம்.

இன்று என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1து கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகசர் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் உயர் அதிகாரியின் உத்தரவு பெற்று எங்கள் முன்னிலையிலேயே அழித்தார்.

பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து எதிரி மீது வழக்கு பதிவு செய்தார்.

வழக்கு தொடர்பாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்தாக சொல்லப்படும் இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் 100மீ இருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடம் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். அசாஆ-1 ஆன கைப்பற்றுதல் மகசரில் Mensclub (Deluxe

Brandy) 5 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி வைத்திருந்தாக சொல்லப்படும் பை எந்த வகையானது என்றால் சோல்டர் பை. அதையும் கைப்பற்றினோமா என்றால் சரிதான். எதிரி எங்களை பார்த்ததும் என்ன செய்தார் என்றால் ஒடுவதற்கு முயற்சி செய்தார். எவ்வளவு தூரம் ஓடினார் என்றால் 20மீ இருக்கும். முதலில் நான் தான் ஒடி சென்று பிடித்தேன். இதனை பொது மக்கள் பார்த்தார்கள் என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட மது பானங்களும் மதுபான பாட்டில்களையும் அழிப்பதை பொது மக்கள் பார்த்தார்களா என்றால் சரிதான். அதனை புகைப்படம் ஏதும் எடுக்கவில்லை. வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தான் தயார் செய்தோம். எதிரி மதுபான பாட்டில்களை யாருக்காவது விற்பனை செய்தாரா என்றால் இல்லை. எதிரியிடம் ஒப்புதல் வாக்குதுலம் பெறப்பட்டது. நான் நான் சொல்வது போல் ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றும், அவ்வாறு நடந்து இருந்தால் பொது மக்களையும் சாட்சிளாக சேர்த்திருப்போம் என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக இந்த வழக்கை எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**